தமிழர் நேசன்

(தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை)

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு — திருக்குறள்.

தொகுதி V. { துன்மதி௵ கார்த்திகைமீ } பகுதி 8.

ஒலி நூல்.

Sound.

ஸ்ரீமான். K. P. யஜ்ஞேசுவர சர்மா, M. A, L. T. எழுதியது.

மூன்றாவது அதிகாரம்.

(தொடர்ச்சி)

இப்போது ஒரு வஸ்துவின் பாகங்கள் சாதாரண ஹார்மானிக சலனம் செய்தால் அவ்வஸ்துவில் எப்படி அலைதோன்றக் கூடுமென்பதைக் கவனிப்போம். ஒரு கயிறு போன்ற நீண்ட வஸ்துவானது வரிசையாய் இருக்கும் பல புள்ளிகளா (particles) லாக்கப்பட்டிருப்பதாக வைத்துக் கொள்வோம். 1வது புள்ளி ஏதோ ஒரு வெளிக்காரணத்தால் அவ்வரிசைக்குக் குறுக்காக ஹார்மானிக சலனம் செய்யுமானால் சற்று நேரத்துக்குப் பிறகு 2வது புள்ளியும் சலனம் செய்ய ஆரம்பிக்கும். இன்னும் சற்று நேரத்துக்குப்பிறகு 3வது புள்ளி ஆட ஆரம்பிக்கும், இங்ஙனம் எல்லாப் புள்ளிகளும் ஒன்றன்பின் ஒன்றாக ஆடத்தொடங்கும்.

இப்படி ஒரு புள்ளியை ஆடச்செய்தால் வஸ்துக்களின் இயற்கை யமைப்பினாலாகிய குண விசேஷங்கள் காரணமாக மற்றப் புள்ளிகளும் அசையத் தலைப்படுகின்றன. இப்படி அசைவதில் அவற்றின் கம்பனகாலம் 1செகண்டு என்றும் ஒரு புள்ளியின் சலனம் அடுத்த புள்ளிக்குத்தாவ ($\frac{1}{16}$) வீசம் செகண்டு பிடிக்குமென்றும் வைத்துக்கொண்டு புள்ளிவரிசையில் சலனம் ஆரம்பித்தது முதல் ஒவ்வொரு காலங்களில் என்ன என்ன தோற்றம் உண்டாகுமென்று பார்ப்போம். 4வது படத்தில் புள்ளிவரிசை முதலிலிருந்தபடி காட்டப்பட்டிருக்கிறது. 1-வது புள்ளி ஆடத்துவக்கின ($\frac{1}{16}$) வீசம் செகண்டுக்குப் பிறகு முதற் புள்ளி கொஞ்சம் கீழே வந்திருக்கும் 2-ம் புள்ளி ஆட ஆரம்பிக்கும். இன்னொரு வீசம் செகண்டுக்குப் பிறகு



முதற் புள்ளி இன்னும்கொஞ்சம் கீழே வந்திருக்கும் 2-ம் புள்ளி முன் முதற் புள்ளியிருந்த இடத்துக்கு நேராக வந்திருக்கும். 3-வது புள்ளி ஆட ஆரம்பிக்கும், இங்ஙனம் ஒவ்வொரு வீசம் செகண்டு ஆனபிறகு புள்ளிகளின் இட மாற்றப் புள்ளி வரிசையின் தோற்றமும் 5 முதல் 20 வரை இலக்க மிட்டபடங்களில் காட்டப் பட்டிருக்கின்றன. [226-ம பக்கம் பார்க்க] ஹார்மானிக சலனமானது நிகழும்போது ஒவ்வொரு புள்ளியும் தன் இருப்பிடத்துக்குச் சற்று மேலும் கீழுமாக ஆடுகின்றனவே யொழிய முன்னே பின்னே ஓடுவ தில்லை யென்பதும், வீசம் செகண்டில் ஒரு புள்ளியிலிருந்து மறுபுள்ளிக்குத் தாவி சலனம் முன்னேறும் போது அலை ரூபம் விருத்தியாகி (1 கால் செகண்டில் கால அலையும், $\frac{1}{2}$ செகண்டில் $\frac{1}{2}$ அலையும் 1 செகண்டில் முழு அலையுமாக முன்னேறுவதும் குறிப்பிடவேண்டும்.



படம் 21

மேலும், முதல் புள்ளியானது தன் இருப்பிடத்தை விட்டுக் கீழே போய், மறுபடியும் இருப்பிடத்துக்கு வந்து மேலே போய், மறுபடியும் யதாஸ்தானத்துக்கு வரும் நேரத்தில், அதாவது அதன் கம்பன காலமாகிய 1 செகண்டில், ஹார்மானிக சலனமானது 17 வது புள்ளி வரை எட்டி ஒரு முழு அலை தோன்றுகிறது. இன்னும் ஒரு செகண்டான பிறகு அச்சலனம் 33 வது புள்ளி வரை எட்டும் : 2-முழு அலைகள் தோன்றும். (21 வது படத்தைப் பார்க்கவும்) முதற் புள்ளியிலிருந்து 17ம் புள்ளி வரையிலுள்ள தூரமும் 17 முதல் 33 வரையிலுள்ள தூரமும், 33 முதல் 49 வரை

யிலுள்ள தூரமும் சமமாகவேயிருக்கும். இந்த தூரத்துக்கு அலை நீளம் என்று பெயர். 5 லக்கமிட்டபாகம், 21 லக்கமிட்டபாகம் இவற்றுக்கு உச்சிகள் (crests) என்றும் 13, 29 லக்கமிட்டபாகங்களுக்கு குழிவு (troughs) கள் என்றும் பெயர். ஒரு உச்சியிலிருந்து மறு உச்சிவரையிலும், அல்லது ஒரு குழிவிலிருந்து மறு குழிவு வரையிலுள்ள தூரமும் ஒரு அலை நீளத்துக்குச் சமமாகவே இருக்கும்.

ஒரு செகண்டில் எத்தனை அலைகள் தோன்றுகின்றனவோ, அந்த எண் ஆவிருத்தி அல்லது கம்பன எண் எனப்படும். முன் சொன்னவற்றைக் கவனித்தால் ஒவ்வொரு புள்ளியும் ஹார்மானிக சலனம் செய்யும் போது அவற்றுக்கு என்ன ஆவிருத்தியோ அத்தனை அலைகள் ஒரு செகண்டில் தோன்றுமென்பது விளங்கும். அலையுற்பத்திஸ்தலத்திலிருந்து ஒரு செகண்டில் எவ்வளவு தூரம் கலக்சம் செல்லுகிறதோ அது அலையோடும் வேகம் (velocity of leave propagation) எனப்படும். ஆதலின் வே = ஆ × நீ. அதாவது ஆவிருத்தியையும் நீளத்தையும் பெருக்கிவரும் தொகை வேகத்தைக் கொடுக்கும் என்று தெரிகிறது.

(தொடரும்)

கிளர்ச்சிப் பொருள் தேட்டவழக்கம்.

The Stimulant Habit.

லண்டன் மாநகரில் பிரசுரமாகும் டைம்ஸ் பத்திரிகையின்
விசேஷ வைத்தியசாஸ்திர நிருபரின் வியாசத்தினின்று
ஸ்ரீமான் P. N. அப்புஸ்வாமி ஐயர் B. A., B. L.,
தொகுத்தெழுதியது.

நகரங்களில் சுகாதாரமற்ற வாழ்க்கை புரிந்து வருபவர் பலர் தாம் சோர்வுறும் வேளைகளில் கிளர்ச்சியைத் தரும் பொருட்களை உட்கொள்கின்றனர் என்பது யாவரும் அறிந்த விஷயம். அவ்வகைப் பொருள்களுள் பெரும்பான்மையனவும் பானகங்கள் தாம். அவற்றுள் கட்பொருளாகும் மது ஒன்றாயினும், அதை அவற்றுள் முக்கியமானதாகக் கருதுதல் கூடாது. டீ, காப்பி முதலியவை தாம் அதைவிட மிகுதியாகவும் வெகு ஜனங்களாலும் பருகப்பட்டு வருகின்றன. காப்பி வழக்கம் என்பது பலருக்கு நீக்க ஒண்ணாத வழக்கமாயிருப்பது யாவரும் அறிந்ததே. வழக்கம் போல் ஒரு குறிப்பிட்ட வேளையில் சிறிது காப்பித் தண்ணீர் அருந்தாவிட்டால் இவர்கள் படும்பாடு சொல்லி முடியாது. சிலர் தங்களுக்குக் கிறுகிறென்று வருகிறதென்றும், சிலர் தமக்குப் பித்துப்பிடித்தாப் போல் இருக்கிறதென்றும், சிலர் தமக்கு ஒன்றும் ஓடவில்லை என்றும் கூறக்கேட்கிறோம். பொதுவாக இவர் எல்லோரும் ஒருவகைக் களைப்பை அடைகின்றனர் என்பது பொதுப்படை.

இத்தகைய விபரீதக் களைப்பை அடைந்து கிளர்ச்சியை நாடும் ஒருவன் இயற்கையான ஆரோக்கியம் பெற்றிருக்கின்றுனு அல்லவா என்பது ஆராயத்தகுவது. சாதாரணமாகக் கிளர்ச்சியை நாடிச் சிறிது சாருயம் முதலிய லாகிரி வஸ்துக்களை உட்கொள்ளுபவன் இயற்கை நியமங்களை நிராகரித்து நடக்கிறுனென்பது பொதுவாக யாவரும் ஒப்புக் கொள்ளும் விஷயம். கறுத்துக் கசக்கும் காப்பியை உட்கொண்டு இப்பொழுது தான் உயிர் வந்தது" என்று கூறும் சாதாரண மனிதன் ஒருவன் அதே மாதிரியாக இயற்கை விதிகளை நிராகரிப்பவனு? அவனது உடல் ஆரோக்கிய முள்ளதா? என்பனவற்றைச் சற்று விசாரிப்போம்.

களைப்பு என்னும் உணர்ச்சியானது இரத்த ஓட்ட சம்பந்தமானது. இரத்த ஓட்டம் மந்தமாக நடைபெறும் போதும், சிறிது தடைப் பட்டு நடக்கும் போதும், இரத்த ஓட்டத்தைச் சரிவர நடத்தி மேற்பார்க்கும் ஏற்பாடுகளில் ஏதாவது பிசகுகள் உண்டாயிருக்கும் போதும் களைப்புத் தோன்றுகிறது. இதற்குக் காரணம் இடையறுறு உடலெங்கும் உடற் பொருள் அழிந்தழிந்து விளைந்து வருவது போல் உடலுறுப்புக்களில் முக்கியமான தாகிய மூளையிலும் அவ்வாறு அழிந்துவரும் மூளைப் பொருளானது இரத்த ஓட்டம் குன்றியதால் போதுமான அளவு மறுபடியும் உண்டாக்கப்படுகிறதில்லை என்றும் இக் குறைவே களைப்பைத் தருகிறதென்றும் சிலர் எண்ணுகின்றனர். ஆதலால் இரத்த ஓட்டத்தை மாறுபடுத்தும் காரணமே களைப்பு உண்டாவதற்குங் காரணமென்பது தெளிவாகிறது.

காப்பி முதலிய கிளர்ச்சிப் பொருள்கள் இரத்த ஓட்டத்தைச் சரிவர நடத்தும் நரம்பினத்தை நேராகத் தாக்குகின்

றன. உடனே சீர் கெட்ட இரத்த ஓட்டம் ஒழுங்காகிவிடு கின்றது. இந்த ஒழுங்கு நிமிஷ மாத்திரம் நீடித்திருக்கிற தே யன்றி, திண்மையான ஒழுங்கு ஏற்படுகிறதில்லை. ஏனெனில் களைப்பைத் தரும் காரணமானது அகற்றப்படவில்லை. இது ஓர் உதாரணத்தால் விளங்கும். அயர்ந்து ஓட முடியாது தள்ளித் தள்ளாடி ஓடும் குதிரையைச் சவுக்கால் அடித்து ஓட்டுவதையே இவ்வாறு உண்டாகும் க்ஷணகாலக் கிளர்ச்சிக்கு ஒப்பிடலாகும். சோர்ந்த குதிரை ஓடுவதினின்று சவுக்கடியானது குதிரைக்குப் புஷ்டியைத் தருகிறதென்றுவது, அல்லது அதனால் குதிரையின் களைப்பு நீங்குகிறதென்றுவது, சொல்லலாகுமோ ?

ஆகையால் களைப்பைத் தரும் இரத்த ஓட்டப் பிசகை எப்படி முற்றிலும் சரிப்படுத்துவது என்பதை ஆராய்வது கிரமமே யன்றி, தற்போதைக்கு எப்படி அதைத் தூண்டிச் சரிப்படுத்திக் கொள்ளலாம் என்பதை நினைப்பது கிரமமல்ல. அப்படி இரத்த ஓட்டத்தைச் செம்மைப் படுத்த வேண்டுமாயின் அஃது இன்ன இன்ன காரணங்களால் சரிவர நடந்து வருகிறதில்லை. என்பதை அறிந்து கொள்ளுவது அவசியமாகும், அதிகமாக அலையாது இருந்த இடத்திலிருந்தே வேலை செய்து வருபவர் விஷயத்தில் இன்ன காரணத்தால் அவரது இரத்த ஓட்டம் பிசகாக நடை பெறுகிற தென்பதை எளிதாய் அறிந்து கொள்ளலாம். அவர்களுள் முக்கால்வாசிப் பேர்களுக்குக் குடல் ஒழுங்காய் வேலை செய்து வராத காரணத்தால் வெளியே தள்ளப்படவேண்டிய விஷ வஸ்துக்கள் அவ்வாறு அகற்றப்படாது மறுபடியும் உடலினுள்ளிழுக்கப்பட்டு இரத்தத்தோடு கலந்து உடலுக்குத் தீங்கு விளைக்கின்றன.

இதனால் மனதிற்குத் தோன்றியவாறு மாத்திரைகளை யும் மருந்துகளையும் வாங்கிச் சாப்பிட வேண்டிய சந்தர்ப்பம் வாய்த்ததென்று எண்ணலாகாது. முப்பது முப்பத்தைந்து வயதில் சிலர் பருத்து ஊதுவதற்கு முக்கிய காரணமென்ன வென்றால் நோயற்ற நல்வாழ்கை புரிந்துவரப் போதுமான அளவு பிராணவாயு (ஆக்ஸிஜன்) அவர்களுக்கு இல்லாது போவது தான். பிராணவாயுவின் அளவு குறைவதால் அவ ரது தசையினத்தின் சுறுசுறுப்புக் குன்றிப் போகிறது. மேலும் ஜீரணசக்தியும் குறைந்து போகிறது. ஊக்கத்தைத் தரும் உணவுப் பொருள்களைக் கிரகித்துக் கொள்ளுவதில் மட்டு மல்ல, ஒவ்வொருவகை உணவுப் பொருளையும் சாதா ரணமாக உடலினுள்ளாக்குவதிலுமே மிகுந்த குறைவு ஏற்ப டுகிறது.

உட்கொள்ளப்படும் உணவு வேண்டியது வேண்டாதது என்று பிரிக்கப்படவேண்டும், வேண்டிய பாகம் கிரகிக்கப் படவேண்டும் வேண்டாதது தள்ளப்படவேண்டும் என்னும் இயற்கை முறையானது இவர்களது உடலில் கிரமப்படி நட ந்தேறுவதில்லை. இதனால் உடலுக்கு வேண்டாக் கழிபொ ருள்கள் பல உண்டாக்கப்படுகின்றன. அவை அனைத்தும் கிரமமாக அகற்றப்படுவதும் இல்லை. குடலில் உண்டாகும் இந்த அழுக்குக்களைப் பேதி மருந்துகள் கொடுத்து அகற்றி விடுவதும் சாத்திய மில்லை. ஏனெனில் உட்கொண்ட உண வுப் பொருள் குணமழிந்து சிறு குடலிலும் பெருங் குடலி லும் தங்கியிருக்கும் போது தான் இவ்விஷவஸ்துக்கள் உட லினுள் புகுந்துவிடுவதாகத் தோன்றவில்லை. அவை ஜீரண மாகும் போதே சில வேண்டாப் பொருள்கள் உண்டாக்கப் பட்டு உடலினுள் புகுந்து இரத்தத்தின் குணத்தை மாறு

படுத்தி உடலை நோயுறச் செய்கின்றன என்று எண்ணவேண்டியிருக்கிறது. அநேக வகைச் சுரங்களால் நோயுற்றிருக்கும் போதும், சிற்சில விஷங்களை உட்கொண்டு வருந்தும் போதும் இதேவித அடையாளங்கள் காணப்படுகின்றன. இக்காலங்களிலெல்லாம் உடலில் உயிருக்கு இன்றியமையாத சாதகங்களாகும் இரத்த ஓட்டம், மூச்சு விடுதல் முதலியவற்றில் விஷவஸ்துவின் பீடையினால் பிசகுகள் ஏற்படுகின்றன. அதனால் உறுப்புப்பொருளுக்கு (Tissue) வேண்டிய பிராணவாயு அதைப் போய் அடைவதில்லை. ஆதலால் ஜீரணத்தில் குறைகள் ஏற்பட்டு அதனால் உண்டாகும் வேறு சில விஷங்களும் இரத்தத்தின் வழி உடலுறுப்பில் புகுந்து விடுவதால் முதலில் ஏற்பட்ட வியாதி இன்னொரு வியாதியையும் துணையாக உண்டாக்கி விடுகிறது.

இவ்விரு காரணங்களாலும் நோயுற்றுக் களைப்புறும் ஒருவன் மாத்திரைகளை விழுங்கி மருந்துகளைக் குடித்தால் தனக்குள்ள குறைகள் தீர்ந்து விடுமென்று நினைப்பது முழுத் தவறென்பதை அறிந்து கொள்ள வேண்டும். ஆதலால் மாத்திரைகள் சாப்பிடுவதை விட்டு விட்டு எப்படி தனது உடலின் போஷணைக்குப் போதுமான அளவு பிராணவாயுவை உட்செலுத்தி ஜீரணசக்தியை மறுபடியும் உண்டுபண்ணி நோயை அகற்றுதற்கு வேண்டிய உபாயங்களைத் தேட வேண்டும்.

பிராணவாயு நுரையீரலின் வழியே இயற்கையாக உடலில் செல்லுகிறது. எவ்வளவுக் கெவ்வளவு நெஞ்சு அகன்று விரிகிறதோ அவ்வளவுக் கவ்வளவு பிராணவாயுவோடு கூடிய காற்று உள்வாங்கப்படுகிறது. நெஞ்சு இயற்கையாய் எவ்வளவு விரிந்து அகன்று வந்தபோதிலும், தேகப் பயிற்சியை

முறை யறிந்து செய்து வந்தால் அகன்று வருவதைப் போல் அகலுவதில்லை. ஆதலால் உடலைச் செம்மையான நிலைமை யில் வைத்துக்கொள்ள விரும்பும் ஒருவன் நாள் தோறும் கிர மமாகத் தேகப்பயிற்சி செய்து வருவது அவசியம். அப் பொழுதுதான் இரத்தம் உடலெங்கும் ஓடி உலவும். ஆகா ரத்தை ஜீரணம் செய்யும் குடலிலும், உதிரத்தைச் சுத்தம் செய்யும் சுவாசப்பையிலும், மற்றெங்கும் அப்பொழுதுதான் இரத்தம் சுறு சுறுப்பாக ஓடும்; அங்கங்கு வேலைகள் செவ்வனே நடக் கும். தேகப் பயிற்சி இல்லாவிடின் இரத்தம் முற்றிலும் சுத் தமாக மாட்டாது ; அழிந்து வரும் உடலுறுப்புக்கள் சரி வர வளர்ந்து வரா ; அதனால் ஜீரணமும் சரியாக நடக்காது. உட னே உடலானது போஷணை குன்றியதாலும் விஷக்கலப் பாலும் நோயுற்றுவிடும்.

பொதுவாகக் களைப்புற்ற நேரங்களிலெல்லாம் கிளர்ச்சி யைத் தரும் பொருள்களைத் தேடுபவன் புத்திமானாயிருந்தால் இவற்றையெல்லாம் கவனித்து, தனக்கு உண்டாகும் களைப்பு இயற்கையான தல்ல, தனது செயல்களை யொட்டியதே என் பதை அறிந்து, எவ்வாறு தனது வழக்கங்களையும் நடத்தை களையும் செம்மைப் படுத்தலா மென்பதை ஆராய்ந்து தெரிந்து கொள்ளுவான்.

முதன் முதலில் தான் செய்து வரும் தேகப்பயிற்சி போதாதென்பதை அறிந்து, வழக்கத்தை விட அதை அதிக மாகச் செய்யத் தொடங்குவான். பிறகு தான் வழக்கமாக உட்கொண்டு வரும் உணவின் அளவு அதிகமாயிருக்கக் கூடு மென்பதை உணர்ந்து, தைரியசாலியானால் அதன் அளவைக் குறைக்க எத்தனிப்பான், ஏனெனில் மிகுதியான உணவு

ஜீரணிக்கப் போதிய வன்மையில்லாத குடலானது உணவின் அளவு குறைந்தால் ஒருக்கால் அதைச் செம்மையாக ஜீரணிக்கவேண்டிய வன்மை பெற்றிருக்கக் கூடும். "காபி சாப்பிடாமல் போனால் முடியாது" என்று நினைத்திருந்தவர் பலருக்கு அவர் உட்கொண்டுவந்த உணவின் அளவைத் துணிந்து குறைத்தவுடன் காபி மீதிருந்த தேட்டமே இல்லாது போயிற்றென்பதை யாம் அறிவோம். இந்தச் சிறு உபாயத்தால் உடலுள் மேன்மேலும் விஷம் புகுத்தப்படுவது நிறுத்தப் படுகிறது; அதனால் கிளர்ச்சிப் பொருளின் மீதிருந்த தேட்டமும் தொலைகிறது.

இதைத் தவிர இன்னொரு உபாயமென்னவென்றால் பொதுவாகக் கனிவகைகளை ஆகாரமாக உபயோகிப்பது. இவ்விரு உபாயங்களையும் ஒருங்கே கையாண்டு வந்தால் நோயைநீக்கிச் சுகவாழ்வுபுரிவது எளிதாகும்.

கிரேக்க நாட்டுக் கதைகள்
Stories from Greece
2. பேதைமை மிக்க பேயிதன்
2. Phæton

"பிதாவைத் தெரியாப் பேயிதன்" என்று தன் நண்பர்கள் பரிகாசமாய்க் கூப்பிடுவதைக் கேட்டு மிகவும் வருத்தமுற்ற பேயிதன், தனது தாயிடம் வந்து "என் தகப்பன் யார் அம்மா?" என்று கேட்கக் க்லிமெனீ என்னும் அவன் தாய் "குழந்தாய்! நீ சிறிதும் கவலைப்படாதே. கண்ணைப் பறிக்கும் வெள்ளொளி வீசுகின்ற திவ்விய சூரிய ரதத்தைத் தினந்தோறும் வானில் நடத்திவரும் பீபஸ் அபோல்லோ தேவன் தான் உனது தந்தை. அவர் தேவர்களுள்ளும் கூட மிகவும் கீர்த்தி பெற்றவர்" என்று சொல்லி அவனைத் தேற்றினாள்.

இம்மொழிகளைக் கேட்ட பேயிதன் அடைந்த மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் அளவில்லை. உடனே அவன் தனது தோழர்களிடம் சென்று "என்னைச் சாதாரண மனிதனது பிள்ளையென்றல்லவோ எண்ணியிருந்தீர்கள். என் தந்தை யார் தெரியுமா? மிகவும் வல்லமை பொருந்திய அபோல்லோ தேவன் தான் எனது தந்தை" என்று பெருமை கூற, அச்சிறுவர்கள் அம்மொழிகளை நம்பாது அவனை இன்னும் பரிகாசம் செய்தனர். அவன் வெட்கி, நடந்ததைத் தன் தாயினிடம் போய்த் தெரிவித்தான்.

அவளும் முதலில் சிறிது வருத்த முற்றுப் பிறகு உரிய காலம் வந்து விட்ட தென்பதை அறிந்து "நான் சொன்னது பொய்யல்ல : மெய் தான். நீ உன் தந்தையைப் போய்ப் பார்த்துப் பேசி, நீ அவருடைய மகனென்று யாவரும் அறியும்படி, அவரிடமிருந்து ஏதாவது ஒரு நல்ல வரம் பெற்று வருவாயானால் உன்னை அப்புறம் ஒருவரும் ஏச மாட்டார்கள். எனக்கும் நற் பெயருண்டு. உனக்கும் கீர்த்தியுண்டாகும்" என்றனள்.

அவமானம் தூண்ட ஆசை முன்னிழுக்க வெகு வேகமாகச் சென்ற பேயிதன் விடியு முன்னர் அபோல்லோ தேவனது பொன் மாளிகையை அடைந்தனன். அங்கே அழகு மிக்கதொரு மண்டபத்தில் பச்சை, நீலம், சிவப்பு முதலிய பன்னிற ஒளிக் கதிர்களை நாலா பக்கங்களிலும் சிதறிவீசும் இரத்தினங்கள் பொதிந்த தந்தச் சிங்காதனத்தின் மீது சிவப்புப் பட்டாடை அணிந்து விளங்கும் தேவனைக் கண்டான். மணிகள், நாட்கள், மாதங்கள், பருவங்கள் முதலியவான அவனது மந்திரிகளும் பரிவாரங்களும் அவனைப் புடைசூழ்ந்து நின்றனர். நறு மணம் நிறைந்த புது மலர்மாலை சூடிய வசந்தமும், பிற ஆடை இகழ்ந்து இலை ஆடை புனைந்து தானியக் கதிர்களால் செய்யப்பட்ட கிரீடம் தரித்த வேனிலும், கனிக்குலைகள் சுமந்து நிற்கும் கூதிரும், வெள்ளிபோல்நரைத் தலையோடும், நடுக்குறும் உடலோடும் கூடிய சிசிரமும் அங்குத் தேவனடி பணிந்து நின்றனர். இந்தக் காட்சியின் மாட்சிமையைக் கண்ணுற்ற பேயிதன் அப்படியே பிரமித்து நின்றனன்.

சர்வ சாக்ஷியான அத்தேவன், பேயிதன் வந்திருப்பதை அறிந்து, மனிதர்களால் பார்க்க ஒண்ணாத ஒளிப்போடு கூடிய

தனது கதிர்க் கிரீடத்தைக் கழற்றிவைத்து, "வா: குழந்தாய். இம் மாளிகைக்கு நீ வந்ததில் எனக்கு ரொம்ப சந்தோஷம். ஆனால் சாதாரணமாய்ப் பூலோக வாசிகளான மனிதர்கள் இங்கு வருவதில்லை. நீ வந்த விசேஷமென்ன, அப்பா. ?" என்று பரிவுடன் கேட்டான்.

இப் பிரிய மொழிகள் காதில விழவே பேயிதனும் கூசி மூடிய கண்களைத் திறந்து, சிறிது தைரியம் கொண்டு, தனது வேண்டுகோளைத் தெரிவிக்கத் தேவசிங்காதனத்தைச் சற்று நெருங்கினான். அத் தேவனது சிரித்த முகத்தைப் பார்த்ததும் பயம் முற்றிலும் தெளிர்ந்தது. தான் அபோல்லோவின் மகனென்பதை பூலோகத்திலுள்ளவர் நம்ப மாட்டோமென்கிறார்களென்றும், "அபோல்லோவின் மகனே இவன்" என்று ஐயமறத் தெரிவிக்கும் அடையாளம் ஒன்றை அவர்களுக்குக் காட்டினால்தான் அவர்கள் நம்புவார்களென்றும், அது வரை தானும் தனது தாயும் படும் அவமானத்திற்கு அளவே இருக்காது என்றும், அதை நீக்குவது அவரது கடனென்றும் பணிவாய்த் தெரிவித்தான்.

"நீ என் மகனென்பதை உலக மறிய நான் ஒப்புக்கொள்ளுகிறேன். இப்பொழுது நீ என்னிடம் வந்து தெரிவித்தது மிகவும் சரி, நீ எந்த வரம் வேண்டுமானாலும் கேள், தருகிறேன். ஸ்டிக்ஸின் மீது ஆணை. இந்த ஆணையை எந்தத் தேவனும் கடக்கத் துணியான். என்ன வரம் வேண்டும், தைரியமாய்ச் சொல்லு" என்றான் அத்தேவன்.

"சூரிய இரதத்தை ஒரு நாள் நான் ஓட்ட வேண்டுமென்பது தான் எனக்கு வெகு நாளாக ஆசை, அதற்கு அனுமதி தரவேண்டும்" என்று வெகு ஆவலுடன் கேட்டான் பேயிதன்.

தேவனது காந்தி பொருந்திய முகம் சற்று வாட்ட முற்றது. அவன் சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்து, தலையை அசைத்துச் சொல்லுவான் ; "பயமறியாப் பைய, நீ செய்யத் துணிவது என்னவென்று அறிவையா? தேவர்களாலேயே செய்ய இயலாத காரியத்தை மனிதர் செய்ய இயலுமோ? அதிலும் அறிவுப் பிராயம் வராத உன்னைப் போன்ற சிறுவன் இதைப் பற்றி நினைப்பதும் தகுதியோ? தேவாதி தேவனன ஜோவினலும் கூடச் சூரிய ரதத்தின் குதிரைகளை வசக்கி நடத்த முடியாதே. சொலிக்கும் தேரின் தட்டின் மீது நிமிர்ந்து நின்று அம் முரட்டுக் குதிரைகளை அடக்கி கொடி நிரம்பிய வழியாகும் விண்ணின் மீது நடத்துவது, ஒலிம் பஸில் வாழும் தேவர்களுள் என்னைத் தவிர வேருருவராலும் முடியாதே. கேவலம் மானுடன், அதிலும் சிறுவன், நீ இதை எப்படிச் செய்யக் கூடும்? கேட்டை உறுதியாக விளைவிக்க வல்ல இவ் வெண்ணத்தை விட்டுவிடு. வேறு எந்த வரமாயினும் கேள். தேவலோகத்திலுள்ளதோ பூலோகத்திலுள்ளதோ, எது வேண்டுமாலுைம் கேள். தருகிறேன். இது சத்தியம். ஸ்டிக்ஸின் மீது ஆணை." தேவர் கோனுக்கும் தலை வணங்காத் தேவன் தனது புத்திரனின் மீதுள்ள வாஞ்சையால் இவ்வாறு கூறிக் கெஞ்சினன்.

மாட்சிமை பொருந்திய தேவன் கோபம் கொள்ளாது தணிந்து கெஞ்சிப் பேசியதால் பயம் நீங்கி இறுமாப்புற்ற பயமறியாப் பிராயமுள்ள அச்சிறுவன், தன் தகப்பனது புத்திமதிகளைச் சிறிதும் மதியாது, "நான் கேட்ட வரத்தை, வாக்களித்தபடி, கொடுப்பதானல் கொடுங்கள் இல்லாவிட்டால் போங்கள். வேறெந்த வரமும் எனக்கு வேண்டியதில்லை" என்று ஒரே பிடிவாதமாய்க் கூறி விட்டான்.

கிழப்போவது கேடுதான் என்பதை நிச்சயமாய் உணர்ந்த போதிலும், சத்தியத்தால் கட்டுண்ட சூரிய தேவன் பேயிதன் கேட்ட வார்த்தையே கொடுக்கவேண்டிய தாயிற்று.

இதற்குள் இரதம் புறப்படவேண்டிய நேரமும் வந்தது. அரோரா தேவியும் கீழ்த்திசையை மூடியிருந்த செந்நிறத் திரைகளைத் திறக்கத் தொடங்கினள். அபோல்லோவும் கவலை கொண்ட மனத்தினனாய் அவ் இரதம் நிற்கும் சாலைக்குப் பேயிதனை அழைத்துச் சென்றான். தேவச்சிற்பியாகிய வல்கன் தேவனால் செய்யப் பட்ட அவ் இரதத்தின் அழகை எப்படி வருணிப்பது. பசும் பொன்னால் செய்த அவ் இரதத்தில் பதித்த ஒவ்வொரு இரத்தினமும் நாலா பக்கத்திலும் ஒளி வீசியது. அவ்வாறுள்ளவை எத்தனை இரத்தினங்கள். தேரைக் கண்டதும் பேயிதனுக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவில்லை. "நமது அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். இப்பேர்ப்பட்ட தேரின் மீது ஏறிச் சவாரி செய்யும் பாக்கியமே பாக்கியம்" என்று, எண்ணி எண்ணி மனம் பூரித்தான்.

நக்ஷத்திரங்கள் மறைந்து சந்திர பிம்பம் சிறிது மங்கியதும் அவ் இரதத்தில் குதிரைகளைப் பூட்டவேண்டிய வேளை வந்தது. அமிர்தத்தைப் புசித்து, இரவில் நன்கு தூங்கி இளைப்பாறிய வன்மை பொருந்திய அந் நான்கு குதிரைகளும் கனைத்துக் கால்களைப் படபடவென்று அடித்துத் தமது வேலையைச் செய்ய ஆயத்தமாயிருப்பதைத் தெரிவித்தன. மணிகள் என்கிற சுறுசுறுப்பான வேலையாட்கள் குதிரைகளுக்குக் கடிவாளங்களை மாட்டி அவைகளை இரதத்திற் பூட்

டினை. திவ்விய இரதத்தின் அபரிமிதமான சூட்டைத் தாங்கும் வல்லமை அளிக்கும் ஒரு தைலத்தைப் பேயிதன் மீது பீபஸ் அன்பொடு தடவி அவனுக்கு ஆயிரம் புத்திமதி சொன்னான்.

"பயங்கரமான மிருகங்களின் அடையாள மிட்டுள்ள நேர் வழியைக் கவனித்து உன் இரதத்தைச் செலுத்து. உறுமும் ரிஷபத்தின் கொம்புப் புறமாகப் போகும்போதும், கர்ஜிக்கும் சிங்கத்தின் வாய்ப் புறமாகப் போகும்போதும், தேளின் விரிந்த கால்களினண்டையிற் செல்லும் போதும், நண்டின் பக்கத்தில் போகும் போதும், வெகு சாக்கிரதையாக இரு. தென் துருவத்தையும் வட துருவத்தையும் அணுகாது நடுவாகச் செல். ஆகாசத்தின் நடுவழியே நேரே மேற்கைப் பார்த்துப் போ. வேறு வழிகளெல்லாம் அவ்வளவு பத்திரமில்லை. இரதத்தைத் தணித்து நடத்தாதே நடத்தினால் பூமி பொசுங்கிப் போகும். உயர்த்தியும் நடத்தாதே ; நடத்தினால் சுவர்க்கத்தில் சூடு உறைக்கும், தேவர்களுக்குத் துன்ப முண்டாகும். கடிவாளத்தை இழுத்துப்பிடி, ஒரு பொழுதும் தார்க்கோலால் குதிரைகளைத் தூண்டாதே. சிறிதும் தூண்டப்படாமலே அவை வெகு வேகமாய் ஓடுவன. தூண்டி விட்டால் அவற்றை அடக்க முடியாது. ஆதலால் ஆரம்ப முதலே அவற்றைத் தூண்டாமல், தம் மிஷ்டம் போல் அவற்றைச் செல்லவிடாது அடக்கிப் பிடித்து நடத்துவதிலேயே உன் முழு மனத்தையும் செலுத்து. அதுதான் நீ எடுக்கவேண்டிய முயற்சி எல்லாம். இரதத்திலேறு; புறப்படு. இல்லை:—வேண்டாம்; சற்று பொறு. நிதானித்து நினைத்துப்பார். உனக்கு இதனால் உண்டாகப்போவது கௌரவமல்ல, கீர்த்தியல்ல, கேடுதான். வழக்கம் போல் தேரை நானே ஓட்டிச் செல்கிறேன். நீ சும்மா இரு," என்று, இவ்

வாறு குழம்பிய மனத்தோடு பீபஸ் சொல்லிய நல்லுரைகள் பேயிதன் காதில் ஏறவேயில்லை.

அவன் மிக்க ஆவலுடன் தேர் மீது ஏறி நின்று கடி வாளங்களைக் கையிற் பிடித்தான். இரதம் சன்னத்தமானது கண்டு தேடிஸ் சுவர்க்க வாயிலைத் திறந்து விடவும் குதிரை கள் குதித்துக்கொண்டு புறப்பட்டு விட்டன.

"நீங்கள் பயப்படவேண்டாம். நான் போய் வருகி றேன்" என்று பேயிதன் குதூகலமாய்ச் சொல்லிக் கொண் டிருக்கும்போதே அவ் இரதம் வெகு தூரம் சென்று விட்டது.

முதலில் சிறிதும் பயமின்றிக் கீழ்த்திசைப் பனிகளின் வழியே, கீழ் காற்றுப் பின் தொடர, வெகு வேகமாய்க் குதி ரைகளைப் பேயிதன் நடத்திச் சென்றான். செல்லும் வே கத்தினால் அவனுக்குச் சிறிது மூச்சு முட்டித் திணறத் தொடங்கினான். தேரின் மீது கவசம் பூண்டு மிகவும் வலிமை பொருந்திய தேவன் ஏறுவதற்குப் பதிலாக ஒரு சிறு பையன் ஏறியிருப்பதால் தேரில் சரியான கனமில்லை. தேரானது பாரமேற்றாத மரக்கலம் போல் இங்கு மங்கும் சாய்ந்து ஆடிற்று. அதனால் பேயினது தலை கிறுகிறுத்தது. ஓட்டத் தெரியாதவன் கடிவாளங்களைப் பிடித்திருக்கிறானென் பதைக் குதிரைகள் வெகு சீக்கிரம் தெரிந்து கொண்டன. கொஞ்ச தூரம் சென்றதும் அவை துள்ளிக் குதித்துத் திமி றிப் பிடுங்கிக் கொண்டு புறப்பட்டு விட்டன. சாதாரணமாய்ச் செல்லும் வழியை விட்டு அகன்றன. மின்னொளிபோல் ஆகா சத்தில் இங்கு மங்கும் அலைந்தோடும் சூரிய ரதத்தைக் கண் ணுற்ற பூலோக வாசிகள் பிரமித்துக் கேடுகாலம் வந்து விட் டதென்று அலங்கோலப்பட்டனர்.

இவ்வாறு சிறிது தூரம் சென்றவுடன் தான் முட்டாள் தனமாக வரம் கேட்டது பேயிதனுக்குத் தெளிவாயிற்று. எப்படியாவது இந்த ஆபத்திலிருந்து தப்பவேண்டுமென்று எண்ணலானன். இப்பொழுது தான், தகப்பன் கூறிய புத்தி மதிகள் எவ்வளவு நன்மை பயப்பவை என்பது தெரிந்தது. ஆனால் என்ன செய்ய முடியும் ? வேகத்தினல் தலை கிறுங்கி முகம் வெளுத்து, உடல் நடுக்குற, எங்கேயாவது வழி யுண்டாவென்று நாலாபக்கமும் நோக்கினன். கீழே, பரந்து விரிந்த கடலையும் உயர்ந்து தணிந்த நிலத்தையுமே கண் டான். மேலோ அளவும் எல்லையும் அற்ற ஆகாசத்தைத் தவிர வேறொன்றும் கண்ணுக்குத் தென்படவில்லை. தன் னால் கூடிய வரையில் கடிவாளங்களைப் பிடித்திழுத்துப் பார்த்தான், குதிரைகளை நிற்கச் சொல்லிக் கூவினன். அவை இவ்வொன்றையும் சிறிது கூட லக்ஷ்யம் பண்ணவில்லை. தம திஷ்டம் போல இங்குமங்கும் தேரை இழுத்துக் கொண்டோ டின. ஒரு வேளை திடீரென உயரக்கிளம்பி மேகமண்டல த்தைப் புகையச் செய்தன. உடனே கடலுள் மூழ்குவன போல் கீழே பாய்ந்தன. இதனல் பூமியிலுண்டான சேதத் துக்கு அளவே யில்லை. கம்பீரமாய் நடுவானில் தலைக்கு நேராகச் சென்று உலகைச் செழிக்கச் செய்யும் சூரியன், கோபமுற்று, மின்னல் போல இங்குமங்கும் பாய்ந்தோடி, பூமியையும் மனிதனையும் தொலைக்க எண்ணங் கொண்டது போல் தோன்றிற்று. உலகிலெங்கும் புல் பொசுங்கியது, கதிர் கரிந்தது, காடுகள் தீப்பற்றி எரிந்தன, வெட்டாந்தரை வெப்பத்தால் விண்டு உதிர்ந்து பொடியாயின, பாறைகள் படீரென வெடித்துப் பிளந்தன, கற்கள் உருகின, நதிகள் வறண்டு ஒளித்தன, ஏரிகள் கொதித்துக் கொந்தளித்தன, கடலும் வற்றிக் குறைந்து பாலையாயிற்று. நீர்வாழும்

மீனினமனைத்தும், கொந்தளிக்கும் நீரின் சூட்டைப் பொறுக்காது நிலத்தில் துள்ளி விழுந்து திணறிக் கருகிப் பொசுங்கின. சமுத்திர ராஜனாகிய பொஸைடான் மும்முறை தலையைத் தூக்கிப் பார்த்துச் சூடு தாங்க முடியாது வரவரக் குறைந்து கொண்டே வரும் நீரினுள் அமிழ்ந்து கொண்டான். பூமியின் மீது மழையும் பனியும் இல்லாது போயிற்று. பூமியைத் தூக்கித் தோள் மீது வைத்துத் தாங்கிவரும் ஆட்லஸ், சூட்டால் காய்ந்து சிவந்த பூமியைக் கீழே போட்டு விடலாமா வென்று எண்ணலானான். பூமியில் பல இடங்கள், மணற்பாங்காக இருந்தவை, கொதிக்கும் மணலையுடைய பாலைவனங்களாயின. அன்று தான் நீகிரோவஜாதியர் கரிந்து கறுப்பாயினர். மனிதர் வாழும் நகரங்களிற் பல சாம்பராய்ப் போயின. பொறுக்கொணா நோவுடன் மனிதர், புறைதேடும் எறும்புகள் போல், புகலிடமின்றி இங்குமங்கும் ஓடியாடித் தவித்தனர். "மகாப் பிரளயத்துக்குப் பின்பு இப்பேர்ப்பட்ட ஆபத்து வந்ததேயில்லை. நாம் சமீபத்தில் என்ன மகா பாபம் செய்தோமோ தெரியவில்லையே" என்று மனிதர் கதறி வருந்துவராயினர்.

இவ்வளவில், இனிக் குதிரைகளை அடக்கி இரதத்தைச் சரியாக நடத்துவோம் என்ற எண்ணம் பேயிதனுக்குச் சிறிதும் இல்லாது போயிற்று. பயத்தினாலும் வெப்பத்தாலும் நடுநடுங்கி, மதி மயங்கிக் கையிலிருந்த உபயோக மற்ற கடிவாளங்களை நழுவவிட்டு, முழந்தாள் பணிந்து, கைகூப்பி, தன் தகப்பனை நினைத்துத் தியானித்துத் தன்னைக் காப்பாற்ற வேண்டுமென்று கெஞ்சிக் கதறினான்.

ஆனால் அதே சமயத்தில் "நாங்கள் எப்பிழை செய்தோம்? எங்களை என் வருத்துகிறாய்? ஏ ஈசா! எங்களால் இது பொறுக்க முடியவில்லையே. நாங்கள் வீணாக மடிகிறோமே, எங்

களைக் காப்பாற்றலாகாதா ?" என்று பூமியினின்று ஒரு பெரும் கூக்குரல் எழுந்தது. பேயிதனது அபயக் குரல் இப்பெரும் கூச்சலினால் அபோல்லோவின் காதில் விழவில்லை.

எல்லாம் வல்ல தேவர்க் கரசனான ஜோவ், நடுப்பகலில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தார். ஒரு நாளுமில்லாதபடி திடீரெனப் பெருங் கூக்குரலொன்று காதில் வந்து விழவே, திடுக்கிட்டு எழுந்தார். கண்ணைத் திறந்து, தலையைத் தூக்கிப்பார்த்ததும் இன்னது நடந்தது என்பதை அறிந்து கொண்டார். பக்கத்திலிருந்த வஜ்ஜிராயுதம் ஒன்றைக் கையிலெடுத்து வீசியெறிந்தார். அது தேர்த்தட்டின்மீது மூர்ச்சித்துக் கிடந்த பேயிதனைத் தாக்கி அவனைத் தேரினின்று கீழே தள்ளியது. இரதத்தின் சூட்டினால் வாடி வதங்கிய அவனது உடல் ஜ்வலிக்கும் வஜ்ஜிராயுதத்தால் அடிபட்டதும் தீப்பற்றியது. எரிந்து கீழே விழும் அவனது உடலானது ஆகாசத்தினின்று ஓர் உற்கை விழுவதுபோல் தோன்றிற்று. அவ் உடல் நேராக ஈரிடேனஸ் நதியில் விழுந்து சொய்யென்ற ஓசையோடு கரிக்கட்டையாய்ப் போயிற்று.

பாகனில்லா இவ்விரதத்தின் குதிரைகள் நுகத்தைத் திமிறித் தள்ளிவிட்டு நேராகத் தமது லயம் போய்ச் சேர்ந்தன. ஒரு நாளுமில்லாதபடி அன்று நடுப்பகலில் இரவு வந்துற்றது. பேயிதனது அடாச் செயலால் பூமியின்மீது கொளுத்தப்பட்ட இடங்களினின்று மட்டும் ஆங்காங்கு சிறிது வெளிச்சம் தோன்றியதே யொழிய வேறு ஓரிடத்திலும் வெளிச்சமே யில்லை. துயரம் நிரம்பிய அந்நாளில் வீண் கர்வம் கொண்டு அடாச்செயல் செய்யத் துணிந்த பேயிதன் இளம் பிராயத்திலேயே உயிரிழந்தான். மகன் மீதுள்ள வாஞ்சையால்உலகத்தினர்க்கு இப் பெரும் கேடு விளைவித்தோமே

என்று எண்ணி வெள்கினான் அபோல்லோ தேவன். இவ்வாறு அறியாத்துணிபால் உயிரிழந்த அவனது உடலை ஈரிடேனஸ் நதியுள் வாழும் கன்னியர்கள் எடுத்து அதன் கரையிலேயே விதிப்படி புதைத்தனர்.

தீங்கிழைத்த பேயிதனை உலகினர் எவ்வளவு பழிக்கினும் அவனை நினைந்து வருந்து வாரிலர் என்று கூறலாகாது. அன்பு மிக்க அவன் தாய் அந்நதிக் கரையில் வடித்த இரத்தக் கண்ணீரினால் சிறிது காலம் அந்நதியின் நிறமே மாறியது. அவனது சகோதரிகள் மூவர் அங்கு நின்று நைந்து நைந்து அழுது உருகுவதைக் கண்ணுற்ற தேவர்களும் அவரது துயரத்தைக் கண்டு இரங்கி அவர்களை அக்கரையின் மீது நிற்கும் மரங்களாக்கினர். அவர்கள் எப்பொழுதும் அங்கு நின்று நீரின்மீது கண்ணீர் வடித்துக் கொண்டேயிருந்தனர் அவனது ஆப்த நண்பனான ஸிக்னஸ் மூழ்கி மூழ்கிப் பேயிதனது உடலின் கருகிய துண்டுகளை வெளிக் கொணருவதைக் கண்டு, தேவர்கள் அவனை நீரின் மீது எளிதில் நீந்தவல்ல அன்னப் பறவையாக்கினர்.

ஒளிர்வின் மீனே *!
Bright Star!

ஒளிர்வின் மீனே! [1] உனைப்போல் ஒரேநிலை
மிளிர்தர [2] யானும் விரும்புவேன்; ஆயின்,
ஒருதனிச் சோதியாய் இரவினில் ஓங்கி,
இருவிழி இமையா(து), உறங்கா(து), இயற்கையைக்
கமையொடும் [3] காக்கும் காவல் முனி போல்,
அமைவுற மாந்தர்வாழ் மண்ணை, [4] அர்ச் சகரின் [5]
அலைகடல் தூநீ ராட்டும் அழகினை,
மலை புலம் பனியால் பயப்பய மறைபடும்
காட்சியை உனைப்போல் கண்ணுற அன்றால்;
எனினும், ஒரேநிலை, மாறுபா டின்றி,
கனிவுறும், [6] அழகி, என் காதலி, கொங்கைமேல்
தலையுற, [7] அதன் சிறு தணிவையும் கிளர்வை [8] யும்
நிலையாய் என்றும் உணரவும்; நிலையாய்,
என்றும் இனிய சஞ் சலத்தினில் [9] எழவும்;
என்றுமே இன்னணம் வாழ்ந்திட, அன்றேல்,
பொன்றிட அங்ஙனே பொறிகள் அயர்ந்தே.

அ. மா.

---

* Translation of Keats' Sonnet, *Bright star*

1. ஒளிருகின்ற (துருவ) நக்ஷத்திரமே. 2. பிரகாசிக்க. 3. பொறுமையோடு. 4. பூமியை. 5. விக்கிரகங்களைத் திருமஞ்சன மாட்டும் பூசாரிகளைப் போல, 6. முதிர்ச்சியடையும் (கொங்கையொடுகூட்டுக) 7. நான் தலை சாய்த்து. 8. சுவாசிப்பதாலுண்டாகும் தணிவையும் எழுச்சியையும். 9. இன்ப உணர்ச்சியால் உண்டாகும் உள்ள இயக்கம். கருத்து. யானும் துருவநக்ஷத்திரத்தைப்போல் ஒரே நிலையிலிருக்க விரும்புகிறேன்; ஆயின், அதைப்போல் ஆகாயத்தில் தொங்கி இயற்கை நிகழ்ச்சிகளைக் காண்பதற்கன்று; என் காதலியின் மார்பின் மீது தலை வைத்திருந்து, அப்படியே ஒரே நிலையாய் இன்பம் அடைதற்கே; அன்றேல், அந்த நிலையிலேயே பொறிகள் சோர்ந்து ஆவி விடுதற்கே—என்பது.

தில்லைக் கோவிந்தன்.

Thillai Govindan.

பதினைந்தாம் அதிகாரம்.

என் வீட்டு வாழ்க்கையையும் வெளிவாழ்க்கையையும் விவரிப்பது.

காலக்கிரமத்தை பின்பற்றாமல், குடும்ப வரம்பினுள்ளும், அந்த மாயசக்கரத்தின் புறம்பிலும், என்வாழ் நாட்களில் பிரதானமாக நான் செய்த செய்கைகளையும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் இங்கே வரைகிறேன். நோயாற் சற்று வருந்திய பிறகு நாணிப் பாட்டி இறந்து போகவே, என்தாயார், தங்கை, என் மனைவி, மக்கள் என்ற இவர்தாம் என்குடும்பம் ஆயினர். கிறிஸ்துவ வேதமான "பைபிளில்" தன்தந்தையையும் தாயாரையும் கைவிட்டுத்தன் மனைவியுடன் தான் ஒருவன் கூடி வாழவேண்டுமெனக் கூறியிருப்பதை அநுசரித்து, முதல் முதலின் என் மனைவியைப்பற்றி எழுதுகிறேன்.

அவள் உடம்பு கெட்டுப் போனதையும் தலைவலி முதலிய பீடைகளால் அவள் வருந்தி யதையும் பற்றி முன்பே கூறியிருக்கிறேன். அபாத்துக்கரியும் நானும் "ஹிஸ்டிரியா" என்றும், மற்ற என்குடும்பத்தோர் எல்லோரும் ஒரே பிடியாய் "பிசாசின் ஆவேசம்" என்றும் கூறிவந்தநோய் அதிகரிக்கவே, ஆங்கிலவைத்திய சிகிச்சையில் சற்றும் குணம் ஏற்படாததால், அவளை "உள்நாட்டுப் பண்டிதர்" கள் கையிலும், மந்திர வாதிகள் கையிலும் கூசாமல் ஒப்புவித்ததை மன்றி

அவள் பொருட்டு அவர்கள் சொற்படியெல்லாம் வைதிகச் சடங்குகளும் பூசைகளும் செய்ய வேண்டியும் வந்தது. வாஸ்தவத்தில், ஒன்றையுமே நம்பாத என் தீவிர அவநம்பிக்கையொருபுறமிருக்க, அந்த மந்திரவாதிகளில் சிலர் காட்டிய திறனையும் செய்த அற்புதச் செய்கைகளையும் கண்டு மயங்கி என் மனம் கலங்கினதால், அவர்களை ஆஷாடபூதிகள் என்றும் மூடர்களென்றும் என்னால் திரஸ்கரிக்க கூடவில்லை. என் மனைவி, சிலவேளைகளில், கல்லோ மரமோ என்னும்படி மணிக்கணக்காய் உயிர் போனவள் போல் விழுந்து கிடப்பாள். ஔஷதஜாபங்களோ, ஊசிகொண்டு குத்தியிறக்கும் மருந்துகளோ, ஒன்றும் பயன் படா. பிறகு, மந்திரவாதி வருவார். ஏதோ முணு முணுத்துக் கொண்டு, ஒரு சிமிட்டு விபூதியை எடுத்து அவள் கட்டை மீதெறிவார்; உடனே அவள் திடுக்கென எழுந்து உட்கார்ந்து, அவருடன் பேச ஆரம்பித்து, பிசாசுகளையும் பூதங்களையும் பற்றிக் கதைகதையாய்ப் பேசுவாள். அது "ஹிப்னடிஸமோ" "மெஸ்மெரிஸமோ" வேறு யாதோ? எதானாலும், அந்த "தாந்திரிகரில்" சிலர்க்கு அதிசயச்சக்திகள் உண்டு என்பதில் சந்தேகமில்லை. எனவே அதைக் கொண்டு பலன் அடைய நான் பின்வாங்கவில்லை. இப்படி மூன்று வருஷங்களுக்கு மேலாயின. நான் பட்ட துயரத்தோடும் ஓயாத மனக்கவலையோடும் ஒப்பிடுங்கால் நான் இதுவிஷயமாய் செலவழித்த பணம் ஒரு பொருட்டாய்த் தோன்றுமோ? இறுதியில், குடும்பத்தார் எல்லாருடனும் இராமேசுவர யாத்திரை செய்தோம். அங்கே அதிகச் செலவிழுக்கும் கருமங்கள் சில இயற்றித்திரும்பியபின் என் மனைவியின் உடம்பு தேறிற்று. அது முதல், முன்னளவு இனைவுதவறி வைத்தியக்காரி போலிருக்கவில்லை; அவளது ஆவேசகாலங்களில், அம் மந்திரவாதிகளில் ஒருவர் அவளைப்பிரம்பு கொண்டு அடித்த

கடோரமான அடிகளைப் பற்றி இப்போது நினைத்துக்கொண்டாலும் என்னுடல் பதறுகின்றது. இவ்வாறு ஒருவிதமாய் அவள் தேகஸ்திதி திருந்தி முன்போலாகுமுன் தமிழ அக்ஷரங்களும் ஆங்கில எழுத்துகளும் அவளுக்கு அடியோடு மறந்து போயின. மறுபடியும் நான் அடிப்படியிலிருந்து ஆரம்பிக்கவேண்டியதாயிற்று. படிக்கும்பருவம் தாண்டிய அவள், சற்று மந்தபுத்தியுள்ளவளாயும் நான் ஆத்திரக்காரனும் அவ்வளவு சரியான உபாத்தியாயராகவும் இல்லாததால், அடிக்கடி மனஸ்தாபங்கள் உண்டாவதும், ஒருவரையொருவர் குறை கூறுவதும் ஏற்பட்டது. இந்தச் சன்லையை ஒழிக்கலாமென்று அவளுக்கு ஓர் உபாத்தியாயர் ஏற்பாடு செய்தேன். அவர் தொள்ளுகிழவராயினும், புருஷனாகையால், எப்படியும் அவரிடம் படிக்கக் கூடாது என்று என் தாயார் என் மனைவியைத் தடுத்துவிட்டாள். அதன் மேல் எத்தனையோ சிரமப்பட்டு, கொள்ளைப் " பணம் செல விட்டு, ஓர் உபாத்தியாயினியைச் சம்பாதித்தேன். அப்போதும் என் தாயார், அவளைப், பறைச்சி, கிறிஸ்து வச்சி, வீட்டிற்குள் ஏறக் கூடாது, என்று தடுக்கவே, என் மனம் புண்ணாகி, முதல் முதல் என் தாயாருடன் சண்டைக்கு நின்றேன். இஃதெல்லாம் என்னால் பொறுக்க முடியவில்லையென்றாலும், நான் விட்டு விடவில்லை. வீட்டிற்குச் சற்று வெளியே தனித்து இருந்த என் ஆபீஸ் அறையில் உபாத்தியாயினியிடம் தினந்தோறும் ஒரு மணிக்கூறு படித்து விட்டுப்போக வேண்டுமென்று, என் மனைவிக்குக் கட்டளையிட்டேன். என் தாயார் இதை ஆக்ஷேபிக்க முடியவில்லை. ஆனால், அந்தப் பொல்லாப் படிப்புமுடிந்ததும், அதற்கு ஒரு பிராயச் சித்தமாக, குளத்திற்குப் போய் ஒரு முழுக்கு முழுகின பின்தான், தன் காட்டுப்பென் வசப்படி பேறலாம் என்று,

என் மனைவியைத் தினந்தோறும் ஸ்நானம் செய்வித்தாள். இவ்வளவெல்லாம் ஏற்பட்டதாலும், உபாத்தியாயினியும் அவ்வளவு தேர்ந்தவளல்லாததாலும், என் மனைவி படிப்பில் அதிக விருத்தியடையவில்லை. குழந்தைகளும் மற்றக்குடும்பக்கவலைகளும் உண்டாகவே, இந்த வெளி வேஷமும் நின்று விட்டது. இன்றும் என் மனைவி எழுத்தறியாத நிரக்ஷரகுக்ஷியாகவே யிருக்கிறாள். இது, அக்காலத்தில் எனக்கு எவ்வளவு வருத்தம் தந்தது என்று சரிவர வருணிக்க முடியாது. கம்பன், ஷேக்ஸ்பியர், இவர்களின் காவிய ரசத்தை அவளுடன் அருந்திச் சுகிக்கலாமென்ற என் கனுக்களையெல்லாம் கைவிட எவ்வளவு மனம் வருந்தினேன்! அவளைக் கெஞ்சினேன், போதனைகள் செய்தேன், பயமுறுத்தினேன்; அவளும், பாவம், எத்தனையோ தரம் பிரயத்தனம் செய்தாள்; ஒன்றும் பயன் படவில்லை. படிக்கும் வயது கடந்தவளாயும், புத்திகூர்மையற்று ஆயிரக்கணக்கான சச்சுவேலைகளாலும் கவலைகளாலும் பீடிக்கப் பட்ட அவள் போன்ற ஸ்திரீயினுள்ளவரைப் படிப்பிக்கப்போதுமான சௌகரியங்கள் இல்லாததாலும், கணக்கில்லா இடையூறுகள் இருந்ததாலும், சேகரித்து வைத்த தேன் போன்ற என் இனிய பாலியக்கனுக்கள் எல்லாம், நாளடைவில் சிதறுண்டு, மண்ணோடு மண்ணாய்ப் பாழாயின.

வாஸ்தவத்தில், ஆடம்பரம் வெளிவேஷம் முதலிய செயற்கை மாறுபாடுகளொன்றும் எனக்குப் பிடிக்காது. ஸ்திரீகள் தமக்குள் இயற்கையழகுடன் இருப்பது தான் எனக்குத் திருப்தி. எவ்வளவு அதிகம் நகைகள் ஒருத்தி பூண்கிறாளோ, அவ்வளவு என் கண்ணுக்கு இனிமை குறைந்து தோன்றும். என் தாயார் மனைவி இவர்களின் அபிப்பிராயமோ,

வேறு விதம் என்று சொல்லவேண்டியதில்லை. அவர்களுக்கு ஏதாவது புதிதாய் ஒரு நகை செய்ய வேண்டு மென்றிருந் தால், அது கிடைக்கும் வரை, என் சாப்பாட்டுக் கூடத்தை பள்ளிக்கூடமாகவும் படுக்கை யறையை உபதேச கிரகமாக வும் ஆக்கிவிடுவார்கள். முதலில் நான் ஒரு பிடிவாதமாய் விடாமிண்டனாய் கின்றேன்; ஆனால், வரவர என் அன்பின் ஆதிக்யம் குறைந்து, அன்பின் பாத்திரமும் ஒரு பொருளா ய்த் தோன்றுததால், அவரவர் போக்கின் படி போகவிடும் தாராள மனத்துடன், அவர்களிஷ்டப்படி யாகட்டு மென்று தணிந்து விட்டேன். இதனால் இப்போது *பல காரணங்கள் கொண்டு என் சொத்தில் ஏறக்குறைய பாதிப்பாகம் நகை களாயிருக்கின்றது. எப்படி யானால் என்ன என்று, இது விஷயமாய் நானும் சற்றும் மனம் கவலுவதில்லை.

(தொடரும்).

குறிப்புக்கள்.
Notes

மீசை.

மனிதனது முகத்தில் தோன்றும் மயிர் அவனுக்கு உபயோகமுள்ளதா அல்லவா என்ற விஷயத்தைப் பற்றி வெகு நாளாக விவாதம் நடந்து வருகிறது. சிங்கத்தின் பிடரி மயிரைப் போலவே மனிதனது முகத்தில் தோன்றும் மயிரும் அவனது தோற்றத்துக்கு காம்பீரியத்தைத் தருகிறதென்றும், ஆதலால் அஃது அழகை அளிப்பது, என்றும் ஒரு கக்ஷியார் கூறுகின்றனர். அழகைத் தருவது என்பது ஒரு பெரிய காரிய மல்ல. இயற்கையில் இந்த அற்ப விஷயத்துக்காகச் சாதாரணமாக இம் முயற்சிகள் காணப்படுவதில்லை. மனிதனது தலையிலிருக்கும் மயிர் சூட்டினாலும், குளிரினாலும் அவனது மூளை தாக்கப்படாது காக்கின்றது. அது போலவே மீசை மயிரும் அவன் மூச்சுவிடும் போது காற்றிலுள்ள தும்பு தூசிகள் எளிதில் அவன் மூக்கினுள் செல்லாது தடுக்கும் வேலிபோலாகிறது. ஆதலால் இத் தொழில் புரியவேண்டுமென்னும் நோக்கம் கொண்டே கடவுள் மீசையை உண்டாக்கியிருக்கிறார் என்பது மற்றொரு சாரரின் துணிபு. மனிதர் மிருக இனத்திலிருந்து மேன்மை யடைந்தவர். அவர் அவ்வினத்தைச் சார்ந்திருக்கும் பொழுது மேலெங்கும் மயிர் செறிந்திருந்தது, காலம் செல்லச் செல்ல உடலில் சிற்சில விடங்களினின்று மயிர் உதிர்ந்து போய் விட்டது: சிற்சில இடங்களில் இன்னும்

உதிராது மயிர் முளைத்து வருகிறது. மயிர் அழகை அழிப்பது. நாகரிகமாக இருக்க விரும்புவோர் அதை அப்போதைக்கப்போது அகற்றி வரவேண்டியது என்பது மற்றுமொரு சாராரின் கொள்கை.

மேல் மீசையைச் சிரைப்பதால் கண்ணுக்குக் கெடுதி உண்டாகிற தென்பது வெகு நாளாகத் தெரிந்த விஷயமென்றும்; தான் நுட்பமாகக் கவனித்து வந்ததில் நுரையீரலையும், சுவாசக் குழாய்களையும் ஒட்டிய நோய்கள் அதிகமாகக் காணப்படுவது இக் காரணத்தாலேயே என்றும் ஆஸ்ட்ரியாவின், தலை நகராகும் வியென்ற (Vienna) விலுள்ள பிரபலவைத்திய சாஸ்திர விற்பன்ன ரொருவர் கூறுகிறார். மேலே கூறிய மூன்று கக்ஷிகளுள் இவர் இரண்டாவது கக்ஷியைச் சேர்ந்தவராகும்.

இவரது திறமை எவ்வள விருப்பினும், அறிவிற் குறைந்த எனக்கு ஒன்று கேட்கத் தோன்றுகிறது. சுவாசாசயம் நோயுறாது தடுப்பது தான் மீசைக்கு உரிய காரியமாயின் மனித இனத்தில் ஒரு பகுதியாகும் பெண் பாலார்க்கு ஏன் மீசை இல்லை? அவர் இவ்வகை நோய்க்குள்ளாக வேண்டுமென்பது கடவுளின் எண்ணமோ? அவ்வாறு அவர் மித்தியாக நோய்க்குள்ளாவதாகவும் மேற் கூறிய சாஸ்திரி சொல்லவில்லையே.

அ.

அறிவு நூல் மொழிகள்

Scientific Terms

சென்னைச் சட்ட கலாசாலையில் ஆசிரியராயிருக்கும்

ஸ்ரீமான் K. சுப்பிரமணியபிள்ளை M. A., M.L. எழுதியது.

Oxygen	கிளர்கால்
Oxide	கிளர்புணரி
Alloy	சேரி
Volume	கோள்
Weight	பழுவு
Mass	தொக்கு, பிண்டம்
Density	திட்பம்
Conduction	பரப்புதல், சூடு பரத்தல்
Convection	(பரப்பிக்) கொண்டியைத்தல்
Radiation	காலுதல், வீசுதல்
Absolute	தனி, தன்னிற்றுனே, முழு
Cell	கண்ணறை
Battery	முதற் கொளி
Adhesion	ஒட்டுதல், ஒட்டியல்
Cohesion	பொருத்தம்
Hardness	இறுக்கம்
Tenacity	பிடிப்பு
Elasticity	துவட்சி
Porosity	துளைப்பு

Ductility	நீளியல், நீண்மை
Malleability	அகன்மை
Horizontal	நேர்குறுக்கு
Vertical	நேர்நேர்
Pressure	அழுத்தம்
Apparatus	அமைகருவி
Gravity	கவர்பழுவு
Spring	துள்ளி
Relative	தொடர் பற்றிய, இனம்பற்றிய
Solution	கரைவு
Power	திறன்

நமது நேசனைப் படிக்கும் நண்பர்கள் இம் மொழிகளுள் யாவற்றையாயினும் தாம் ஒப்ப முடியாதென நினைப்பின் அவற்றுக்கு ஈடான மொழிகளை எனக்கு அனுப்பவேண்டு மென்று தாழ்மையாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கௌரவத்துணைக் காரியதரிசி,
தமிழர் கல்விச் சங்கம்.